©
தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 1.60 பைசா

# தமிழ்நாடு அரசு அரசிதழ்

**அசாதாரணம்** அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது

எண். 343] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 25, 2017

ஐப்பசி 8, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி 3 – பிரிவு 1 (அ)

## தலைமைச் செயலக துறைகளால் வெளியிடப்பட்ட பொது சட்ட நெறிமுறைகள், அறிவிக்கைகள், ஆணைகள், ஒழுங்குமுறை நெறிகள், இன்னபிற.,

## அரசின் அறிவிக்கைள்

### வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017–க்கு திருத்தம்

*[அ.ஆ. எண். 148 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1), 25 அக்டோபர் 2017,*

*ஐப்பசி 8, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண்.எஸ்.ஆர்.ஓ.அ–46(ஊ)/2017.**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017ன் பிரிவு 164ல் (தமிழ்நாடு சட்டம் 2017ன் 19ல்) அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017-ஐ, மேலும் திருத்த, பின்தொடரும் விதிகள் தமிழ்நாடு ஆளுநரால், இதன்மூலம் ஏற்படுத்தப் படுகிறது. அதாவது:–

(1) இந்த விதிகள் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (எட்டாவது திருத்தம்) விதிகள், 2017 என அழைக்கப்படலாம்.

(2) 2017, ஜுன் 29–ல் செயலுக்கு வருமாறு, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017ல் ''படிவம் ஜிஎஸ்டி.ஆர்.எப்.டி–10''க்குப் பிறகு படிவம் ''படிவம் ஜிஎஸ்டி.ஆர்.எப்.டி–11,'' ''ஒருங்கிணைந்த வரி செலுத்தப்படாத சரக்குகள் மற்றும் சேவைகள் ஏற்றுமதிக்கான பிணைப்பத்திரம்,'' மற்றும் ''ஒருங்கிணைந்த வரி செலுத்தப்படாத சரக்குகள் மற்றும் சேவைகள் ஏற்றுமதிக்கான பொறுப்பேற்கும் கடிதம்,'' இடை சேர்க்கப்பட வேண்டும். அதாவது:–

''படிவம் ஜி.எஸ்.டி.ஆர்.எப்.டி—11

(விதி 96—அ-ஐப் பார்க்க)

சரக்குகள் மற்றும் சேவைகள் ஏற்றுமதிக்காக பிணைப்பத்திரம் அல்லது பொறுப்பேற்கும் கடிதம் அளித்தல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. சமசேவஅள | | | | |
| 2. பெயர் | | | | |
| 3. அளிக்கப்பட்ட ஆவணத்தின் வகையினைக் குறிப்பிடுக. | பிணைப்பத்திரம் ☐ பொறுப்பேற்கும் கடிதம் ☐ | | | |
| 4. அளிக்கப்பட்ட பிணைப்பத்திரத்தின் விவரங்கள் | | | | |
| வ.எண் | வங்கி பொறுப்புறுதியின் குறிப்பு எண். | தேதி | தொகை | வங்கி மற்றும் கிளையின் பெயர் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | |
| | | | | |

குறிப்பு: வங்கி பொறுப்புறுதி மற்றும் பிணைப்பத்திரத்தின் அச்சு—நகலை செயல்எல்லை அலுவலரிடம் அளிக்க வேண்டும்.

5. உறுதிமொழி—

(i) சரக்குகள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியின் மீது செலுத்தப்பட வேண்டிய ஒருங்கிணைந்தவரி பாதுகாப்பதற்காக மேலே குறிப்பிடப்பட்ட வங்கி பொறுப்புறுதி சமர்ப்பிக்கப்படுகிறது.

(ii) வங்கி பொறுப்புறுதி காலாவதியாவதற்கு வெகுமுன்னரே, புதுப்பிக்க நான் உறுதி அளிக்கிறேன். ஒரு வேளை நான்/நாங்கள் அவ்வாறு செய்யத் தவறினால், வங்கி பொறுப்புறுதிக்கு எதிராக வங்கியில் இருந்து தொகையினைப் பெறுவதற்கு துறைக்கு உரிமை உள்ளது.

(iii) சரக்குகள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியின் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ஒருங்கிணைந்த வரித் தொகையை உள்ளடக்கி எங்களால் அளிக்கப்பட்ட வங்கி பொறுப்புறுதியினை செயல்படுத்த துறைக்கு தன்உரிமை உள்ளது.

அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரின் கையொப்பம்:

பெயர்:

பதவி / நிலை: ................

தேதி: ...............

## ஒருங்கிணைந்த வரி செலுத்தப்படாத சரக்குகள் அல்லது சேவைகள் ஏற்றுமதிக்கான பிணைப்பத்திரம்

(விதி 96அ—ஐப் பார்க்க)

நான்/நாங்கள் . . . . . . . . . . . . இன். . . . . . . . . . . இதன்பிறகு ‘‘பிணையாளர்(கள்),” என்று அழைக்கப்படுவோராகிய நான்/நாங்கள் இந்தியக் குடியரசு தலைவருக்கு ( இதன்பிறகு ‘‘குடியரசு தலைவர்” என்று அழைக்கப்படுவார்) உறுதிபட கட்டுண்டு இருப்பதன் பேரில் குடியரசு தலைவர் அவர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகையான ரூ. . . . . . . . . . . . . . . . விருப்பத்துடன் உண்மையாக செலுத்தப்படும்.

நான்/நாங்கள் கூட்டாக மற்றும் தனித்தனியாக என்னை / எங்களை மேலும் என்/எங்கள் அந்தந்த வாரிசுகள் / நிறைவேற்றுபவர்கள் / நிர்வாகிகள் / சட்ட சார்பாளர்கள் / பின்உரிமையாளர்கள் மற்றும் சட்டப்படி உரிமையை மாற்றி வழங்கப் பெற்றவர்கள் ஆகியோர் முன்னிலையில், இந்த . . . . . . நாள் . . . . . . .

ஆகையால் மேற்காணும் கட்டுபட்ட பிணையாளர்களுக்கு ஒருங்கிணைந்த வரி செலுத்தப்படாத, இந்தியாவிற்கு வெளியே அவ்வப்போது ஏற்றுமதிக்கான சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்கல்கள் அனுமதிக்கப் படுகிறது.

மற்றும் ஆகையால் பிரிவு 16ன் உட்—பிரிவு (3)ன் கூறு (அ)வின் விதிகளுக்கு இணங்கி பிணையாளர்கள் சரக்குகள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்ய விரும்பினால்;

ஆகையால் குடியரசு தலைவர் அவர்களின் சார்பாக மேற்குறியீடு செய்யப்பட்ட ரூ,___________ தொகைக்கான வங்கி பொறுப்புறுதியினை ஆணையருக்குத் தேவைப்பட்டால் பிணையாளரால் வழங்கப்பட வேண்டும் மேலும் அதேசமயம் மேலே குறிப்பிடப்பட்ட வங்கி பொறுப்புறுதியினை ஆணையருக்காக அத்தகைய பொறுப்புறுதியினை வைப்புநிதியாக பிணையாளர் கொடுக்கவேண்டும் ;

பிணையாளரும் அவருடைய பிரதிநிதியும் ஏற்றுமதி தொடர்பான சட்டத்தின் அனைத்து விதிமுறைகளையும் மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளையும் கடைபிடிக்க வேண்டும், என்பது இந்த பிணைப்பத்திரத்தின் நிபந்தனையாகும்.

மேலும் தொடர்புடைய மற்றும் குறிப்பிடப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகள் முறையாக ஏற்றுமதி செய்யப்பட்டால் ;

அனைத்து ஒருங்கிணைந்த வரி அல்லது பிற சட்டப்பூர்வ கட்டணங்கள் ஆகியவற்றின் உரிய நிலுவைகள் ஏதேனுமிருப்பின், வட்டியுடன், கூறப்பட்ட அலுவலரால், எழுத்துபூர்வமாக கேட்பு

எழுப்பப்பட்ட பதினைந்து நாட்களுக்குள் அரசுக்கு முறையாக செலுத்தப்பட்டால், இந்த கடப்பாடானது இல்லா நிலையதாக வேண்டும்.

இல்லையெனில், மேலும் இந்த நிபந்தனையின் எந்தப் பகுதியையாவது நிறைவேற்ற தவறினாலோ அல்லது மீறினாலோ, அந்த நிலைப்பாடு முழுவீச்சில் மற்றும் உள்ளார்ந்த ஆற்றலுடன் இருக்கும்.

மேலும் குடியரசு தலைவர், தமது விருப்பத்தின் பேரில், வங்கி பொறுப்புறுதியிலிருந்து தொகையினை எடுக்கவோ அல்லது எழுதப்பட்ட பிணைபத்திரத்திரம் அல்லது இரண்டின் கீழும் அவருக்குள்ள உரிமையினை மேற்குறிப்பெழுதப்பட்டதன் மூலம் அனைத்து இழப்புகள் மற்றும் சேதாரங்களை சரிசெய்ய தகுதிவாய்ந்தவராகிறார்.

பொதுமக்களின் விருப்பத்தின் பேரில் ஒரு சட்டத்தினை செயல் படுத்துவதற்காக அரசின் ஆணையின் கீழ் இந்த பிணைபத்திரம் கொடுக்கப்படுகிறது என நான் / நாங்கள் மேலும் உறுதி அளிக்கிறோம்;

இந்த சாட்சிகளின் முன்னிலையில் இந்த நாளில் இதன்முன்னர் பிணையாளர்(கள்)ஆல் எழுதப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

பிணையாளர்(கள்)ன் கையொப்பம்(கள்)

தேதி :

இடம் :

சாட்சிகள் :

(1) பெயர் மற்றும் முகவரி : தொழில்:

(2) பெயர் மற்றும் முகவரி : தொழில்:

(3)

என்னால் இந்த நாளில்.......................................(மாதம்)...............................(ஆண்டு) ஏற்றுக் கொள்ளப்படுகிறது...............................................(பதவி)

இந்தியக் குடியரசுத் தலைவருக்காக மற்றும் அவர் சார்பாக.

**ஒருங்கிணைந்த வரி செலுத்தப்படாமல் சரக்குகள் அல்லது சேவைகள் ஏற்றுமதிக்கான பொறுப்பேற்கும் கடிதம்**

(விதி **96**அ—ஐப் பார்க்க)

பெறுநர்

இந்திய குடியரசுத் தலைவர் ( இதன்பிறகு ''குடியரசு தலைவர்'' என்று அழைக்கப்படுவார்), உரிய அலுவலர் மூலமாக செயல்படுபவர்

நான்/நாங்கள் . . . . . . . . . . . . . .இன். . . . . . . . . . . . . . . . (பதிவு பெற்ற நபரின் முகவரி) சரக்குகள் & சேவைகள் வரி அடையாள எண். . . . . . . . . . . . . . . வைத்துள்ள இதன்பிறகு ''உத்திரவாதமளிப்பவர்(கள்) எனது/எங்களது அந்தந்த வாரிசுகள் உட்பட, நிறைவேற்றுபவர்கள் / நிர்வாகிகள் / சட்ட சார்பாளர்கள் / பின்உரிமையாளர்கள் மற்றும் சட்டப்படி உரிமையை மாற்றி வழங்கப் பெற்றவர்கள், கூட்டாக மற்றும் தனித்தனியாக இந்த நாளில் . . . . . . . . . தேதி . . . . . . . . . . மூலமாக குடியரசுத் தலைவருக்கு பொறுப்பேற்கிறோம்.

(அ) விதி **96**—அ, உப விதி **(1)**—ல் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் ஒருங்கிணைந்த வரி செலுத்தப்படாமல் ஏற்றுமதிக்காக வழங்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள்;

(ஆ) சரக்குகள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி தொடர்பாக, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் அனைத்து விதிமுறைகள் மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளை கடைப்பிடிப்பவர்கள் ;

(இ) சரக்குகள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்ய தவறும் நிகழ்வில், அதன் மீதான ஒருங்கிணைந்த வரியுடன், விலைப்பட்டியல் தேதியிடப்பட்ட நாளிலிருந்து தொகை செலுத்தும் நாள் வரை, செலுத்தப்படாத வரித் தொகை மீது ஒரு ஆண்டுக்கு பதினெட்டு சதவிகிதம் வட்டிக்கு சமமான தொகையுடன், செலுத்தப்பட வேண்டும்.

பொதுமக்களின் விருப்பத்தின் பேரில் இயற்றப்பட்ட சட்டத்தினை செயல்படுத்துவதற்காக உரிய அலுவலரின் ஆணையின் கீழ் இந்த பொறுப்பேற்றல் கொடுக்கப்படுகிறது நான் / நாங்கள் உறுதி அளிக்கிறோம்.

இந்த சாட்சிகளின் முன்னிலையில் இந்தநாளில் இதன்முன்னர் ஏற்பவர்(கள்)ஆல் எழுதப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

ஏற்பவர்(கள்)ன் கையொப்பம்(கள்)

தேதி:

இடம் :

சாட்சிகள்:

1. பெயர் மற்றும் முகவரி தொழில்
2. பெயர் மற்றும் முகவரி தொழில்

தேதி :

இடம் :

என்னால் இந்த நாளில்......................................(மாதம்)................................(ஆண்டு) ஏற்றுக் கொள்ளப்படுகிறது...............................................(பதவி)

இந்தியக் குடியரசுத் தலைவருக்காக மற்றும் அவர் சார்பாக.

முனைவர். ச. சந்திரமௌலி,
கூடுதல் தலைமை செயலாளர்.(முகூபொ).